வைகள் எல்லாம் ஆராயப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்களை நினைவிலே வைத்து, சட்டப்படி, விதிப் படி எதைச் செய்ய இயலுமோ அதை அரசு செய்ய முன்வரும்.

(ஈ) அம்மன்பேட்டையிலுள்ள நவீன அரிசி ஆலை கழிவுநீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் அம்மன் பேட்டையில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏற்படும் விவ சாயப் பயிர் பாதிப்பு, குடிநீர் பாதிப்பு மற்றும் சுற்றுப்புற சுகாதார சீர்கேடு ஆகியவற்றால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட் டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நவீன அரிசி ஆலையானது தஞ்சாவூர் மாவட்டம் அம்மன் பேட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த ஆலை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் பொறுப்பில் உள்ளது. இவ் வாலையில், நாளொன்றுக்கு 50 டன் புழுங்கல் அரிசி உற்பத்தி ஆகிறது. நெல் இரும்புத் தொட்டிகளில் ஐந்து மணி நேரத்திற்கு 70 டிகிரி சென்டிகிரேடு வெப்ப அளவில் ஐந்து மணி நேரம் ஊற வைக்கப்படுகிறது. இதற்குப் பின் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு நெல் நீராவியின் மூலம் அவிக்கப்படுகிறது. அவிக்கப்பட்ட நெல் வெப்பக் காற்று மூலம் உலர வைக்கும் இயந்திரத்தில் ஐந்து மணி நேரம் உலர வைக்கப்படுகிறது. உலர்த்தப்பட்ட நெல் அரவை இயந்திரம் மூலம் அரைக்கப்பட்டு அரிசியாக்கப்படுகிறது. ஊற வைக்கும் தொட்டியிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுநீர் ஆலை யின் தொழிற்சாலைக் கழிவு நீராகும். தொழிற்சாலை நாளொன் றுக்கு 80,000 லிட்டர் தண்ணீரை உபயோகித்து 60,000 லிட்டர்கள் தொழிறசாலைக் கழிவு நீரை வெளி விடுகிறது.

1987 ஏப்ரல் 20] [திரு. ப. உ. சண்முகம்]

தொழிற்சாலைக் கழிவு நீர் மஞ்சள் நிறமாகவும், உயிர் இரசாயன உயிரகத் தேவை உள்ளதாகவும், மிதக்கும் திடப் பொருள்கள், கரையாத திடப் பொருட்களையும் கொண்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நிலைகளிலோ அல்லது நிலத்திலோ வெளியேற்றப்படும்பொழுது நெடியும், முடை நாற்றத்தையும் ஏற்படுத்துகிறது.

4—3—1987 அன்று இத்தொழிற்சாலையைப் பார்வையிட்ட பொழுது தொழிற்சாலையிலிருந்து 600 மீட்டர் தொலைவில் ஓடும் வயலூர் வாய்க்காலில் ஒரு நிலக் கால்வாய் மூலம் வெளியேற்றப் படுவது தெரிய வந்தது. அவ்வப்பொழுது இத்தொழிற்சாலைக் கழிவு நீர் விவசாயிகளால் வயலுக்குத் திருப்பப்பட்டு பாசனம் செய்யப்படுகிறது.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத் தின் 26 ஆவது பிரிவின்படி அன்றாடக் கழிவு நீர்/தொழிற்சாலை கழிவு நீரை வெளியிட வாரியத்தின் அனுமதி கோரி விண்ணப்பித் துள்ளது. இதற்கு ஒப்புதல் இதுவரை வழங்கப்படவில்லை. தொழிற்சாலை, கழிவுநீர் சுத்திகரிப்பு பற்றிய கருத்துருவை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மத்திய அரசில் நிறுவனமான சென்னையில் உள்ள திருவாளர்கள் ரிச்சர்ட்சன் மற்றும் குருடாஸ் (1972) லிமிடெட் கம்பெனியிடம் கழிவுநீர் சுத்தி கரிப்பு சம்பந்தமாக கருத்துருவிற்காக அணுகியுள்ளதாக இவ் வாலை தெரிவித்துள்ளது. தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கும் போது வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப சுத்திகரிப்பு செய்து கழிவு நீரை வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்படும். வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

திரு. எஸ். இராசாராமன்: தலைவர் அவர்களே, இந்த கழிவு நீரால் அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாய நிலங்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்றது. இந்த அறிக்கையிலே 80,000 லிட்டர் தண்ணீர் தினசரி உபயோகப்படுத்தப்படுவதாக குறிப்பு கொடுத் திருக்கிறார்கள். அந்த நிலம் எல்லாம் இன்று பாழ்படுவதோடு மட்டுமல்லாமல் அந்தப் பகுதியில் இருக்கின்ற குடிநீர் எல்லாம்— அது ஃபில்ட்டர் பாயின்ட்டாக இருந்தாலும் அல்லது கிணறு களாக இருந்தாலும்—குடிப்பதற்கு உபயோகம் அற்ற அளவிலே இருப்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசு அறிந்துதான் அந்த ஆலையை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த ஆலைகூட மத்திய அரசு நிறுவனமான சென்னையில் உள்ள திருவாளர்கள் ரிச்சர்ட்சன் அண்டு குருடாஸ் லிமிடெட் கம்பெனியிடம் கழிவுநீர் சுத்திகரிப்பு சம்பந்தமாக ஒரு கருத்துருக்கு அணுகியுள்ளதாக தெரிவித்திருக்கிறார்கள். அரசு விரைவிலே அந்த சுத்திகரிப்பு ஆலையை நிறுவும்படி வற்புறுத்தும்.

திரு. எஸ். இராசாராமன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆலைகள் ஆரம்பிப்பதற்கு முன்பு அல்லது இதுபோன்று சுத்திகரிப்பு செய்வதற்கு அனுமதி பெற்றதற்கு பின்பு லைசென்ஸ் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இப்போது வழங்குகின்ற உரிமங்கள் எல்லாம், இவைகள் எல்லாம் போடப்பட்டால்தான் வழங்கி வருகிறோம். ஏற்கெனவே இருக்கின்ற ஆலைகளில்தான் இந்தப் பிரச்சினை வருகிறது. ஏற்கெனவே இருக்கின்ற ஆலைகளில் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணிக்க வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

(உ) ஆதி திராவிட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க தாட்கோ மூலம் காகித ஆலைகள் நிறுவுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. சின்னராசு மற்றும் வே. கு. சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "தாட்கோவின் மூலம் ஆதி திராவிட மக்களுக்கு வேலையளிக்கும் சிறு காகித ஆலைகள் நிறுவ, கட்டிடங்கள் கட்டப்பட்டும் கதர் வாரியம் இதற்கான இயந்திரங்களைப் பொருந்தும் பணியை முடிக்காததும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.